Digital Collection of Tamil Heritage Foundation

ஸ்ரீராமஜயம்.



# கஜேந்திரமோக்ஷம் தோரா.

பாலக்காடு உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ
கண்ணப்பய்யர் குமாரர்
முத்துலிங்கத்தேசிகர்
ஸ்ரீஹரிதிருவருளினைபெற்றியது.



பாலக்காடு சுலுத்தான்பேட்டை
மெய்ஞ்ஞானவிளக்க அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது
1898௵ ஜனவரி மீ

முதுசொம்
THF

Digital Collection of Tamil Heritage Foundation

ஸ்ரீ ராமஜயம்.

# கஜேந்த்ரமோக்ஷம் தோரா.

பாலக்காடு உபாத்தியாயர் மகா-௱-௱-ஸ்ரீ

கண்ணப்பய்யர்

குமாரரும்

ஸ்ரீமத் நாராயணசுவாமிகள்

திருவடிசம்பந்தியும் ஆகிய

முத்துலிங்கத்தேசிகர்

ஸ்ரீ ஹரிதிருவருளினலியற்றியது.

பாலக்காடு டிஸ்திரிகட் முன்சிப்புகோர்ட்டு வக்கீல்

மகா ௱ ௱ ஸ்ரீ கண்ணன்நாயர் அவர்களும்

ஷை கோர்ட்டு குமஸ்தா

பிரமஸ்ரீ ஆர். சங்கரதத்தையருங்

கேட்டுக்கொண்டபடி

பாலக்காடு கலுத்தான்பேட்டை

சு. கிருஷ்ணசுவாமிபிள்ளையால்

தமது மெய்ஞ்ஞானவிளக்க அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1898 ௵ ஜனவரி ௴

Digital Collection of Tamil Heritage Foundation

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 7 | நிழல் | நீழல் |
| 5 | 10 | செண்புகம் | செண்பகம் |
| 7<br>7<br>8 | 10<br>28<br>31 | கந்துருவ | கந்தருவ |
| 19 | 18 | நீதயே | நீஇயே |
| 20 | 12 | அயய்ம் | அயயம் |
| 21<br>23 | 28<br>12 | ஆநந்தரூபகம் | அர்த்தரூபகம் |
| 24 | 9 | சசார்ந்தனன் | ச்சார்ந்தனன் |

முதுசொம் THF
BRITISH MUSEUM

Digital Collection of Tamil Heritage Foundation

ஹரி ஓம்.

# கஜேந்திர மோக்ஷம்.

## தனியன்

தேமணக்குமலர்மணக்குந் திருமணக்குமணிமார்பன் ஸ்ரீரங்கமத்தின், பாமணக்கும்புகழ்பாடும் பக்தர்திருவாய்மணக்கும்பரமானந்த, நாமணக்குமவரிருக்குமூர்மணக்கும் பேர்மணக்குநம்புஞ்சிந்தைப், பூமணக்குங்கேட்போர்தஞ் செவிமணக்குமல்லலெல்லாம்போக்குந்தானே.

## காப்பு நேரிசைவெண்பா

கார்மருவுபோர்மதக் கஜேந்திரன்றன்மாக்கதையைச்
சீர்மருவுதோராவாய்ச் செப்புதற்கு ஏர்மருவு
சக்கரத்தனக்கரத்தன் சக்கரத்தனக்கரத்தன்
சக்கரத்தன்றுணையதாம்.

## அவையடக்கம்

கரிக்கரமெடுத்தொருவனேகாவென் றழைத்திடக்கருணையாலுதவும்
அரிதிருப்புகழைச்சுருதிகளுரைத்து மளவிடற்கரியதாமென்றாற்
சிறியனேனுரைப்பதென்றெனநிற்கச் சிந்தையென்வயத்துநில்லாது
உரைசெயுமிதனைவொருங்கவுரைக்கு முறையெனவினிதுகேட்
டருண்மின்)

Digital Collection of Tamil Heritage Foundation



இராகம் ஆபி   தாளம் திரிபுடை

பல்லவி

சரணஞ்சரணம்முராரிகரஹரி   சரணம்புகழ்கருணாகர

அநுபல்லவி

இரணியனுரனொடியவருஞ்   சர்வலோகதயாபர
நரசிம்மரூபகிருபாகர   (சரணஞ்சரண)

சரணங்கள்

மடசமகுடசிங்காரபூஷண   கனககௌஸ்துபமணிவண்ண
நடனகருடன்மேலுவந்திருப்பத   நளினமெனக்கருட்கார்வண்ண
மலர்த்துளபமணியுந் தாமரைக்கண்ண   (சரணஞ்)

உலகமனைத்தையுமுண்டுமிழ்ந்திடு   முத்தமாசோதைபெற்றவா
கலகவிழியவர்மயலைவிலக்கிடுங் கமலவீக்ஷண்யமுற்றவா
அருளமலதாக்ஷண்யவித்தகா   (சரணஞ்)

மச்சகூர்மவராகநரசிம்ம வாமனநாரண
அச்சராக்ஷசகோரவச்சுத தரியரூபஜெகத்காரண
மறையறையும் பரமசம்பூரண   (சரணஞ்)

நித்தியானந்தநிற்குணாநந்த நிர்மலாநந்தபூதா
சத்தியாய்முத்துலிங்கத்தாசன்சொல் சர்வகாரணஸ்ரீதர
பரபிரம்மரூபமனோகர   (சரணஞ்சர)

சபைவணக்கம்

கீர்த்தனை இராகம்— சங்கராபரணம் தாளம் ரூபகம்

பல்லவி

சரணவடியர்சபைக்குவந்தனம் ஹரிகுபதிதிருச்   (சரண)

அநுபல்லவி

சரணும்புலன்பொறியுமுக்குணங் கடந்தனைத்திலுந்தொடர்ந்த
நிர்குணப்* புராணமுனிவர்க்கரண மளித்தபொருந்த

Digital Collection of Tamil Heritage Foundation

வேதத்தில்நிறைந்து துலங்கும்

சரணங்கள்

மருதமரமுஞ்சகடமுமுறிந்திடச் சிறுவிரலசைந்திட* மருவுமமரர்
மலர்கள்சொரிந்திட* பருதியாயிரமுதையப்பின்னிடும்* பாருவிண்
ணகமளந்து துன்னிடும்* கருதிநாரதன்றொழுதுபன்னிடும்*
ஜோதிவைகுந்தமீதுமன்னிடும் (சரணவடி)

கங்கையைப்பெருவிரலினிடம்வைத்து ஒருசிலையைமிதித்து
மங்கைபருவந்தங்கும்படி வைத்து
தங்கஅநுமன்தொடவுஞ்சிவந்து சோதைமடியிலிருந்துதவழ்ந்து
கங்குட்பகலுமென்னுட்புகுந்து காக்குந்துன்பங்கள்போக்குந்தி
வ்ய (சரணவடி)

மத்தளஞ்சுருதிக்கிமுழங்கவே அதிமதுரகவியிற்
பத்தர்துதிகள்வைத்து விளங்கவே
முத்துலிங்கத்தாசன்நித்தம்பணிந்திடுஞ்சுத்தமெஞ்ஞானிகளோதி
(த்துணிந்திடும்
அத்திஅழைக்குமுன்னோடிநடந்திடும் சத்துருமாளவைந்தானேபு
ரிந்திடும் (சரண)

தோரா இ—ம் சன்னியாசி ஆதிதாளம்

ஸ்ரீரகுராமன்றிருவடிபெறவே திருநாமந்தனை ஜெபிப்பீர்
கரியுருவாகுங்கஜேந்திரன்மோக்ஷத்தைக் கருத்துடன்கேட்டனு
(பவிப்பீர்

ராமமந்த்ரவைபவம்

பொன்னுலகமுதலாயபூவுலகமியாவும் புகழ்ந்திடுராமமந்தரம்
புராரியயனமரருங்கெருடகின்னரர்களும் பூசிக்குமாராமமந்தரம்
புண்ணியசொரூபநாரதனாதிமுனிவரும் போற்றிடுராமமந்தரம்
புலைகளவுகொலைகாமமுதலாயபாதகம் போக்கிடும்ராமமந்தரம்
மன்னுமறையாகமபுராணவிதிகாசங்கள் வழுத்திடுராமமந்தரம்
மாதாபிதாபந்து மைந்தரும்போலவே வந்திடுமிராமமந்தரம்
மருவிவிடுமெழுகோடிமந்தரதந்தரங்களும் வளரவரும்ராமமந்தரம்
மாபூதவேதாளபில்லிதுர்ப்பேய்களை வதைத்திடுராமமந்தரம்
பன்னுமடியவரிதயமன்னுகமலந்தனிற் பதிந்திடுமிராமமந்தரம்

Digital Collection of Tamil Heritage Foundation

புத்தியும்சித்தியும்முத்தியும்வெற்றியும் பாலிக்குமிராமமந்த்ரம்
பரமாசமியாவுங்கனிந்துபேரின்பம் பழுத்தொழுகுராமமந்த்ரம்
பாசமயலிருளோட்டிரவியெனவொளிதரும்பரமகுணராமமந்த்ரம்
ஆன்மாவுயிர்தன்னுளேமன்னுமுயிராகத் துலங்கிடுமிராமமந்த்ரம்
துரியமாய்த்துரியங்கடந்துசிற்சோதியாய் சுடர்விடுமிராமமந்த்ரம்
சூக்ஷ்மாதிசூக்ஷமாய்மோக்ஷபதமடையவே துணையாகுமிராமமந்த்ர
ஞானபிராமணரீராமன்ராகுராமனைச் சொன்னராமமந்த்ரவாழ்வே (ம்

தோரா

அருள்பிரணவமெனுமொருவிதைதனிலேயருமறையெனும்முளைமுளைத்து* பெரியவாகமங்களாமரியகிளைகிளைத்து பேசுமசாஸ்திரத்தழைதழைத்து* சுததபுராணமதாம்பததியரும் பருப்பிச்சொனுமிதிகாசமலர்மலர்ந்து* அத்தசங்கிதையெனுமுற்றகாய்களைக்காய்த்து ஹரிகதையெனும்பழம்பழுத்து* சோதிவிருக்ஷந்தனிலோதுங்கனியனந்தம் சுகமதாயுண்டதிலோர்கனியாம்* ஆதிமூலத்தைச்சொல்லுஞ்சாதிக்கனியிதனை அனுபவிப்பீர்சித்தாமணியாம்*

பிரயோசனம்

தீவினைதனைப்போக்கும்பாவஜென்மத்தைநீக்கும் தேவசென்மத்தினையுண்டாக்கும்* ஆவித்துணையாய்காக்கும்பேவும்வைகுந்தஞ்சேர்க்கும் அவனியெலாந்தொழமேலாக்கும்*

கேள்க்குமுறை

சித்தசுத்தியதாயபத்திவிரதம்பூண்டு திருநாமம்பன்னிரண்டுந்தரித்து* சுத்தன்வைகுண்டம்வாழும்நித்தன்றனைத்துதிக்கும் கனாமமந்திரமுச்சரித்து*

தக்டா

சித்திரம்போலசையாதிருந்து — ஜெகம்
மித்தையென்றதைமெள்ளவிசழ்ந்து — விஷ்ணு
பத்திரசத்தையுண்டுமகிழ்ந்து — அருள்
பெற்றகதையைக்கேண்மின்றெளிந்து — (கரியுருவா)

திரிகூடாசலவர்ணனை தோரா

பூமகளணியும்மாமணியெனவே பொலிந்திடும்பாற்கடல்தனிலே* மாமகள்கொழுனனுமுருக்கொண்டதென வளர்ந்திடுமொருமலையினிலே*

Digital Collection of Tamil Heritage Foundation

தங்கமுங் கரும்பொன்னும் வெண்பொன்னும் மூன்றுந் தனித்தனிச் சிகரமதாகி* திங்களுமுடுக்களுங் கங்கையுங் கடந்து மேற்செறிந்திடும் விசும்பளாவேகி* ... ... ...

அடிமரகதமாய் நடுவு பொன்மயமாய் அரவுமின் மாணிக்கச் சுடரால்* முடியது விளங்கிடுந் தடவரை நிலத்தில் மும்மூர்த்திகளாமெண் பருணர்வால்* ... ... ...

திருவடி நிழலிலயன் முதலமரர்கள் சிறந்தினிதிருந்திடும் போலே* அரிகளுங் கரிகளும் நரிகளும் வருடையுமமர்ந்திடுமம்மலை மேலே* ... ... ...

சம்புவின் நாசி போலுஞ் செண்பகப்பூமரமும் சந்தன விருக்ஷமுஞ் சூழும்* எம்பெருமான் பதத்தைக் கும்பிடு முனிவரு மிருடிகளுங் குகையில் வாழும்* ... ... ...

## இரட்டை ஆசிரியவிருத்தம்

சீர்பெருகுமாதவன் திருமேனி முழுவதுந் திகழுமுத்தாரமெனவே— தெய்வநன்னதிகளுஞ் செய்யபூஞ்சுனைகளுஞ் செங்கமலமடுவுமிலக— ஸ்ரீராமனெய்யவரு மொருமானை நிகராகப் பலமான் திரிந்து மகிழ— திவ்ய மங்களராமதூதனென வானரத் திரள் சோலைமீதுலாவ— தாருலவுமரிகையிற் சங்குசக்கரமெனத் தயங்குமிருசுடர் தவழவே— சாமகானக் கருடனென்னவொளிர் புள்ளினந் தடஞ்சுனைகுடைந்துபாவ— சர்வகாரணமாய சத்திகளனந்தஞ் சதா நடஞ் செய்வதென்ன— சர்வகாமப்பிரிய தெய்வநன்மாதரார் சந்ததம் பந்தடியில— கார்பெருகுமாமாயனண்டகோடிகளெலாங் கவளமிட்டாலென்னவே— கமலமுகநாககன்னியர்கள் மகிழ்வாகவே கனகவம்மானை போடக்— கண்ணனைக்கூறுதமண்ணுனபாவியர்கள் கட்டுண்டபிறவியெனவே— கனகமணியூசலிற் கருடகின்னரமாதர் கானமயில்போலாடவே— ஏர்பெருகுமாயிரபணாமுடிகொள் சேடனுக் கிணையெனக் குகைகளெங்கும்— எண்டிசையடங்கலுமுழங்கிலுமமையாத வெழின்மாசுணங்கடிரிய— ஞாயாயிரயோசனநீளவகலமு மெய்திவைகுந்தமெனவே— எக்காலுமழியாத திரிகூடமலையினை இறைஞ்சுமின் றொண்டர்களே—

Digital Collection of Tamil Heritage Foundation

துக்டா

திரிகூடமலைவடபாலே　　　　　　அருள்
பெருகிடும்வருணன்கையாலே　　　　செய்யும்
பருமலர்ச்சோலையென்றாலே　　　　சொல்லப்
பெருமையாய்க்கேளுமன்பாலே　　　(கரியுருவாகும்)

தோரா

ஆழிகரித்தகையானாழிமுடிவதனி லமர்ந்திடுமாலமரப்போ
லாம்* நீழற்றாருமுதற்குழுவிருக்குமெலா மேழுலகும்புகழவா
ழும்*

... ... ...

பூசமலைத்தும்மாமலர்சிதரியே பூந்தளிர்க்கைகளைநீட்டுமே*
தாமனைநாபனுக்குசேவர்ச்சனைசெய்யுந் தாசனைப்போலுயர்வைக்
காட்டும்*

... ... ...

ஈசனைபணிந்திடும்பூசனைத்திரவிய மேந்திடுமடியவர்போலே*
வாசனைக்கனிகளும் பேசும்பத்திரங்களும் மலர்களுந் தாங்கிடுமே
வே*

... ... ...

சத்தியவுலகத்தில்நித்தியமறைகளைச் சாற்றிடுமுசத்தைக்
கூவும்* சித்திரக்குயில்களும்பத்திமலர்கள்கோதி சிறந்திடுமாங்கனி
ற்றுவும்*

... ... ...

ஸ்ரீரங்கனாதனை திருவேங்கடேசனை திருவின்மணாளனைக்கூறும்
கிளிமலர்க்காவினிலினியகனியருந்தி விளங்கிடுங்கிள்ளைகளீறும்*

துக்டா

மகத்தெனுஞ்சோலையினிடையே　　　　மலர்
அகத்துறுந்தேன்மழைபடவே　　　　　அதில்
முழைத்திடுந்தவனடுவே　　　　　　புட்பங்
தழைத்திடுமொருதடமடுவே　　　　(கரியுருவாகும்)

மடுவர்ணனை தாவசரு.

ஆழமுங்கீழுமுங்குழுமவ்வகலமு மறிஞர்யோசனைமுன் றா
ரென்பார்* வளமுகிலுறங்குமாள்கடவிதுவென்று கூறைத்தவர்
மயங்கிநிற்பார்*

... ... ...

Digital Collection of Tamil Heritage Foundation

இந்திரன்வனமெனவந்தனல்லோடையி னிருங்கரையருங்குங் கள்விளங்கும்* கந்தரவரிகையிற்சந்ததமிலங்கிடுஞ் சுரிமுகமெனச்சங்குறு லங்கும்* ... ... ...

ஹரிதிருவுந்திதனிற்பிரமனெழுந்தது போலப்பூயத்தினிலன்னம்படுக்கும்* சிறியவர்பிழைபலபுரியினும்பெரியவர் சினந்திடாரெனக்கரைகிடக்கும்* ... ... ...

சக்கரதாரிருபக்கமுமலர்கூடிகள் சார்ந்தினிதிருந்திடும் போலே* தக்கமயில்களுடனிற்குங்காயாபமுந் தயங்கிடுமோடையினருபாலும்* ... ... ...

அந்தனல்லோடைதனிற்கந்தருவகுலத்தில் வந்திடும் ஊஊவெனும்பெயரான்* விந்தைதனைநிகர்க்குஞ் சுந்தரிமனைவியும் விளையாடுமெகிழ்ச்சியிலயரான் ... ... ...

தக்டா

மனைவியுந் தானுமாகக்கூடி — இல்லா
கனகசங்கீதங்களைப்பாடி — அனு
தினமுங்குதித்து விளையாடி — இரு
மனமுமொன்றாகவிலை தேடி — (தரீயுருவாகும்)

தோடா

இருவருங் கேளிசெய்திருந்திடும் பொழுதினிற் சரசவுல்லாசனுங்குளித்தான்* பரிவுடன்மடுவினிலரியதவஞ்செய்முனி பாதத்தையவன்கையாலிழுத்தான்* ... ...

தேவலமுனிவனுங் கோபங்கொண்டெழுந்துடன் சீறிநாகசிம்மம்போலே* பாவியென்காலினை மேவியிழுக்கும் பழிபாவத்திலகப்பட்டதாலே* ... ...

திரிகூடமலையெனும் பெருவரையோடைதனிற் சிறந்திடுமுதலையினுருவாய்* அரிகூடவிளையாடுங்கரிகளுமலைகளுமபர்ந்திடுந்துறைதனிற்றிரிவாய்* ... ...

மாதவன்சபிக்கவும் பேர்தன் கந்தருவனும் மலரடிபிடிசையினிற்றொழுதான்* பாதகனெனவெனக்கேகூதும்சாபங்களைப் பாவிக்கவேண்டுமென்றழுதான்* ... ...

Digital Collection of Tamil Heritage Foundation

### கொச்சகம்

சூத்தனேபோற்றிமேலா முனிவர்க்குமுதலேபோற்றி
நித்தனேபோற்றிஞான நிஷ்டையிலுறைவாய்போற்றி
குத்தமேசெய்தநாயேன் குறைதவிர்த்தாள்வாய்போற்றி
சித்தனேபோற்றிபோற்றி தேவலமுனியேபோற்றி

கீர்த்தனை இ-ம் ஆநந்தபைரவி தா-ம் ரூபகம்

### பல்லவி

முனியேகடைக்கண்பாருமே
தேவலமுனியெனுமணியே சாபத்தைத்தீருமே

### அநுபல்லவி

முனியேமுனிவர்போற்றும்- தனியேமறைகள்சாற்றும்- கனியே
மௌனந்தேற்றும்-தணியாதுயரம்மாற்றும் (முனியேகடைக்கண்)

### சரணங்கள்

சிறியேன்பிழைகள்செய்தேனே- தேவரீர்பாதம்-குறியாதிழு
த்தலைந்தேனே- மரியாதைதன்னைவிட்டு- வெறியாங்காமத்திற்
பட்டு- அறியேன்மதியுங்கெட்டுத்- திரிவேனெந்தலைமட்டும் (மு

சாபானுக்கிரகமாகுமே- யெல்லாவுலகும்- கோபாக்கினியா
ல் வேகுமே- தேவாசுரர்களையும் போவாவென்றேவல்கொள்ளும்
தேவேயாக்கையைத்தள்ளும்- சுவாமிதிருவாய்விள்ளுமே (முனி

வேதவேதாந்தமுடிவே முத்தலிங்கன்சொல்- நாதநாதாந்த
வடிவே பேதைமனதுகொண்டு- தீது செய்தேன்முன்னின்று- ஒ
ழிஞ்சாபந்தீர்த்தின்று- ஆதரவுசெய்நன்று (முனியேகடை)

### தோரா

அருள்பெருமுனிவனுமொருமொழிபகருவா னுருவரையோ
டையிலோர்கரிதான்* வருகுஞ்சீர்த்துறைதனிற்குழகிகாரியாகி
வசித்திடும்போதினிலரிதான்* ... ... ... ... ...

### திக்டா

சக்கரதாரனிவருவார்
பக்கநின்றருளினைப்புரிவார்
துக்கவுடலைமாற்றியெறிவார்
சித்தகந்தருவனுக்கிரிவார்

வந்தான்
உன்
அப்போ
(கரியுருவாகும்)

### தோரா

என்றுமுனிவன்கூறநின்றகந்தருவனு மிருவரையோடைத
னிற்சென்றான்* வென்றிமுதலையாகித்தன்றும்வாறனைவீசி விச
முடன்ஜலத்துனின்றான்* ... ...

### விருத்தம்

அந்தரர்ந்தருவனெனும் ஹூஹூவென்போ னலைமடுவிற்கராவு
ருவாயமருநாளில்* சுந்தரசந்திரகுலத்துக்கொருவனாகித் தொல்
லுலகம்புகழவருந்தென்னர்வாழ்க* தந்திரமந்திரந்தலைவர்ஜெயவெ
ன்றேத்தத் தனிமுதலாயஷ்டதிக்குஞ்சேல்கணாட்டி* இந்திரனு
பேந்திரன்போற்செங்கோலோச்சி யிந்திரத்துய்மனரசாண்டிரு
க்குநாளில்*

### தோரா

போனஜென்மந்தனிலேவானவரியதவம் பொருந்திடப்பாண்
டிமஹாராஜன்* மானவினசம்சாரம்ஞானவிரோதியென்று மதித்
துச்சிந்தித்தான்விசுவாசன்*

தேகமும்போகமும்மோகங்களனைத்துஞ் சீயென்றுமனதினி
ற்பூணான்* நாகணைதியர்தொழுயோகநித்திரைசெய்யும் நாராயண
பத்தனானான்* ... ... ...

தாபத்திரையவலைமேவுஞ்ஜென்மக்கடலைத் தாண்டுந்தெப்ப
மரிதாளென்று* ஆபத்தெல்லாமகற்றுந்தீபச்சுருதிகளா லறிந்து
ணர்ந்தான்மனதுபூண்டு* ... ...

விதிநிஷேதங்கள்சொல்லும்பதினெண் புராணந்தனில்விளங்
குஞ்சத்துவபாகமறிந்தான்* கதியும்வைகுண்டமெனும்பதியும்பக்
தர்க்களிக்கும் கண்ணனேதெய்வமென்றுதெறிந்தான்* ...

முக்கண்ணன்முதலாகத்திக்கிலுள்ளவர்கட்கும் மூவுலகத்தி
னுக்கும்பெரியான்* சக்கரதரனென்றுபத்திமனதுகொண்டு சர்
வசங்கப்ரத்யாகம்புரிவான்* ... ...

### தக்கடா

இந்திரத்துய்மமஹாராஜன் ஹரி

சிந்தனைபாவாதநேசன் வரும்
பந்தபாசங்கெடுக்குந்தாசன் அருள்
முந்துந்திருமுகவுல்லாசன் (கரியுருவாகும்)

### தோரர்

ஆளுமிந்தவுலகும்வாழுஞ்சிம்மாசனமுஞ் சூழுந்தந்திரமும் பாழென்றான்* நாளுந்திருவடிக்கீழ்த்தாளுஞ்செல்வமேசெல்வ னமதென்றுமன்னன்சொல்லிநின்றான்* ... ...

அந்தப்புறத்திருக்குஞ்சங்கைதக்கூட்டத்தைநோக்கு ஆருக்காறு லேனயென்று அறைந்தானே* வெந்தமயானத்துக்கோர்சொந்தவிறகா ந்தேகம் வேண்டுஞ்சுகங்களெல்லாந்துறந்தான்* ...

அரசசெல்வங்களெல்லாஞ் ஸ்ரீஹரிமாதவர்க் கர்ப்பணமென் றுமன்னன்மகிழ்ந்தான்* பரசமயகோளரித்திருவடித்தாமரையை பணிந்துகோட்டைகடந்துபுகழ்ந்தான்* ... ...

### விருத்தம்

மாதர்களாசைவேண்டேன் மண்ணுலகாளவேண்டேன்
பேதயருறவும்வேண்டேன் பிரம்மருத்திரரை வேண்டேன்
சீதராமூர்த்தா ஞானச் செல்வமேமறைகடேடும்
யாதவர்கொழுந்தேவுந்த னடியிணை வேண்டுவேனே

### லாவணி

கோவிந்தாஹரிகோவிந்தா ஜெகன்னாதா ஜெகன்னாதா— கருங்
கொண்டல்மேனியாயண்டர்தொழுந்திருப்பாதா திருப்பாதா
மூவுலகங்களுக்குமோருருவாய்நின்ற ஜோதி பரஞ்ஜோதி— பா
முந்திமார்க்கமதை சத்தியமாயருளாதி யருளாதி
பஞ்சபாதகஞ்செய்யும்வஞ்சகனாகிய நானே யிதோநானே— மடப்
பாவையராசையிற்றுவிழுந்தலைந்தேனே வுலைந்தேனே
தஞ்சமென்றவர்களுக்கஞ்சலென்றேயருணீயே அருணீயே— இச்
சகலலோகமுந்தன்னுளடக்கிவைத்தாயே பெற்றதாயே
அஷ்டலக்ஷ்மிகளிஷ்டநடனமிடும் ராமரகுராமா— யென்
னதிகதுக்கமதையாருடனுஞ்சொல்லலாமா சொல்லப்போமா

Digital Collection of Tamil Heritage Foundation

கஷ்டங்கஷ்டமதிகஷ்டம்வருஞ்ஜன்மத்தாலேஜன்மத்தாலே— உன்
கடாக்ஷிதந்து பரமோக்ஷமருளுந்திருமாலே திருமாலே
அண்டசராசரமுண்டுமிழ்ந்திடுஞ்செவ்வாயாஜெகன்மாயா— வீர
வர்ச்சுனற்குரதசாரதியாய்வருமாயா பக்தர்நேயா
குண்டலஹாரபூமண்டலகோதண்டதாரணா யோகஸ்மரணா— மிகுங்
கோமளசாமளவாமனஸ்ரீதாரமணா மலர்சரணா
மந்திரதந்திரவெந்திரசுந்தர வரதாகற்புவிரதா— பல்
வாலிகாலதிரிசூலிசாபஹரதுரிதா வந்துஅருடா
அந்தரசுந்தரபாலசௌந்தரலீலா நந்தபாலா— அரு
ளற்புதசற்குணசொற்பிரகாசவனுகூலா பூமிபாலா
நித்தியானந்தந்தருஞ்சத்துவகுணதரவாமா பரந்தாமா— வரும்
நீலமேகசிசுபாலசிவஹரநேமா ஹரிநாமா
முத்துலிங்கனுரைக்குங்கத்தனேயுனையன்றிநானேனோ் றெய்வங்கா
ணேன்* மோகதாபஞ்செய்யும்பாபதுர்க்குணங்களைப்பேணேன்
மனப்பூணேன்*

தோரா

நாட்டிலுள்ளவரெலாங்கூட்டமாய்வரக்கண்டு நகைத்தனன்
மௌனமாய்நடந்தான்* வாட்டமில்லாமலரிபாட்டைபடித்துக்
கொண்டு மன்னனுநகரத்தைகடந்தான்* ... ...

கீர்த்தனை இ—ம் சங்கராபரணம் தாளம் ரூபகம்

பல்லவி

சோதைமைந்தாயிந்தநான்பக்கடலைநான்— தொட்டகுறைதீரும்
அருள்பெற்றவழிதாரும் (சோதைமைந்தா)

அநுபல்லவி

வேதமுறையிடும்போதஞ்செய்வாக்கியமோக்ஷம்பரமுத்திக்கேது
வுந்தன்பாதகமலத்தின்போது— யெனக்காதரவாயருளாதுயென்ன
சூது யென்னசூது (சோதை)

சரணங்கள்

அண்டசராசரமுண்டுவளர்ந்தகோதண்டப்பிடித்தகைநேமா—
அக்கர்தண்டமிழாற்சொல்லப்போமா— இதைக்கண்டுமகிழ்ந்திட

Digital Collection of Tamil Heritage Foundation

ராமா பரந்தாமா பரந்தாமா (சோதனை)

ஆரணனே பரிபூரணனே ஜெகத்காரணனே மதுசூதா — நாரணனே நிருப்பாதா — துஷ்ட — மாரணஞ்செய்திடுநீதா — ஹரிநாதா ஹரிநாதா (சோதனை)

சந்தரகோபியர்சந்ததம்பாட வேசிந்தைமகிழ்ந்திடும்லீலா — புகழ் — நந்தன்பெற்றதவப்பாலா — மெய்ந்தன் — புந்தியிலேவரும்சீலா — ஆதிமூலா ஆதிமூலா (சோதனை)

முத்துலிங்கதாசன்நித்தம்பணிந்திடுஞ்சத்துசித்தானந்தபரா — பரா — தத்துவமாகியநேயா — அஷ்ட — சத்திபுகழுமுபாயா — திருவாயா திருவாயா (சோதனை)

திவாசா

மருகமும்பாலையுங்கருகிடுகெய்தலும் வளர்முல்லைவனமும்விட்டேகி* பருதியும்வலஞ்செய்யுமலைய குலாசலமாம் பருவதத்தருகினில்மேவி*

தக்டா

ஆசனந்தன்னின்மன்னனிருந்தான் — ஹரி
பூசனைமானதமாப்புரிந்தான் — தேக
பாசபந்தங்களையுந்தெறிந்தான் — இதைப்
பேசவுமனந்தனிற்றுணிந்தான் — (கரியுருவாகும்)

திவாசா

காயப்பேயேபவுனையுப்பாமமந்திரத்தினாற் கட்டியடிப்பேனோடிப்போவாய்* தாமதப்பேயேநீயும்பாமாப்பேய்களுடன் சங்காரந்தயாயிருந்துசாவாய்* ... ... ...

மோகஜாதிக்கூட்டமேயேகுமென்னைவிட்டிங்கேமுடியாதெஜன்மங்கொடுத்திரிநொந்தேன்* நாகனுதியஞெழயோகநித்திரையைசெய்புக்காரணனருடேடிவந்தேன்* ... ...

நெஞ்சமேயினியுந்தன்வஞ்சகமனத்தையும் நித்தமரிக்கித்தந்தம்பன்று* கஞ்சமலர்க்கண்ணனைதஞ்சந்தஞ்சமென்றெண்ணி கருத்தாய்ப்பாயமிர்தத்தையுண்ணு* ... ...

Digital Collection of Tamil Heritage Foundation

## வெண்பா: கொச்சகம்

அல்லலெனுமில்லாத்தி லாசையெனும்பேய்பிடித்து
சொல்லத்தொலையாத துயர்க்கடலிலேமூழ்கி
அல்லும்பகலுமலைந்ததெலாம் புகன்றழுது
மல்லர்களைக்கொல்லுமரிமலர்ப்பதத்தை நினைப்பாயே

கீர்த்தனை இ-ம் தந்நியாசி ஏகதாளம்

பல்லவி

ஸ்ரீஹரிதிருப்பதம்நினைப்பாயே— நமக்
கருளுட்பொருளுமுண்டாம் மனப்பேயே

அநுபல்லவி

ஹரிஹரிஹரியென்று நினைப்பாயே விண்ணுள்— அரிஅயனமாருங்—
கரு—கின்னரர்களும்— அருவிவிழிசொரிய— தரிசனம்புரிந்திடும்(ஸ்ரீ

சரணங்கள்

அறம்பொருளின்பம்வீடுமரிதானே— ஆனால்வெறும்புளித்தின்
றுநாக்கெரிவானேன்—கூரம்பைபொய்க்கூடென்பதுஞ்சரிதானே—
அதனாற் கோபகாமங்களும்— பாவமோகங்களுஞ்—சீவனாசங்களும்
போவென்றுதூரத்திநீ (ஸ்ரீஹரி)

சரணமென்றுகரங்களெடுப்பாயே— பொல்லாக் காணவாதனை
யெல்லாந்தடுப்பாயே— தருணமிதுவென்றுநீயடுப்பாயே— திருத்
தங்கரத்நமுடியுங்— கங்கைவாழுமடியுஞ்— சங்குசக்ரவடிவும்— எங்
கும்ப்ரபைபடியும்— (ஸ்ரீஹரி)

பந்தமனைவாழ்வெல்லாமறியாயோ— அதைநீ இந்த்ரசாலமென்
பதுங்குறியாயோ— சந்ததம்ராமமந்த்ரம்தரியாயோ— நல்ல தத்து
வமாகச்சொல்லுமுத்திலிங்கனுரையை புத்தியாகவேகேட்டுபத்தி
யுடனேநீயும் (ஸ்ரீஹரி)

தோரா

பஞ்சப்பொறிகளேநீர்கொஞ்சப்புத்தியினாலே பஞ்சவிடயத்
தினைப்பிடிப்பீர்* நஞ்சமென்றதைவிட்டு அஞ்சனவண்ணனது
நாடிப்புகழ்ந்து அருளெடுப்பீர்*

Digital Collection of Tamil Heritage Foundation

### கொச்சகம்

கண்டுகேட்டுண்டுயிர்த்து வுற்றறியுமைம்புலனும்
ஒண்டொடியாள்கண்ணே யுளதென்றுரைப்பாரால்
திண்டிறற்சேரைம்பொறிகாள் சிந்தையதிற்போயாம
லண்டமெல்லாமுண்டுமிழு மாதிதனைக்கூடுமினோ

### தோசா

அலைகடலமுதத்தைப்புலவர்தமக்கருளு மரியினைப்புலன்களே நினைமின்* தலைகளே தொழுமின் விழிகளே யழுமின் தாமரைக்கரங்களே பணிமின்* ... ... ...

### கண்ணிகள்

இ—ம் காம்போதி அடதாளம்

தலையே நீ வணங்காய் மலைதன்னை யெடுத்துகந்து
அலையேவாரிய கண்ணபிரான்றன்னை (தலை)

கண்காள் காண்மின்களோ ஞானக்
கண்ணனைக் கண்மணியை மண்பாரந்தனைத்தீர்த்தமணாளனைக் (கண்)

மூக்கே நீ முகலாய்ஜகமூன்றையுந்தானளந்து
வாக்குமனதுக்கு மெட்டாதபாதத்தை (மூக்)

நாக்கே நீ புகல்வாய்ஹரிநாமசங்கீர்த்தனத்தை
ஆக்கைவிழுமுன்னே கூப்பிட்டுக்கூப்பிட்டு (நாக்கே)

செவிகாள் கேண்மின்களோ திவ்யஆழ்வார்கள்செய்தருளுங்
கவியாருந்திருவாய்மொழி வேதத்தைச் (செவி)

கைகாள் கூப்பித்தொழீர் கருமாணிக்கம்மானை
தெய்வநற்கந்தமும்பூவுஞ்ஜலமுங்கொண்டு (கைகாள்)

### தக்கடா

மன்னனேங்காரவில்லை யெடுத்தான் — வில்லிற்
மனனுவாசியீசனைத் தொடுத்தான் — ஹரி
தன்னைலக்ஷியமாகவடுத்தான் — ஞான
மென்னும்பாணங்கடனை விடுத்தான் — (கரியுருவாகும்).

Digital Collection of Tamil Heritage Foundation

தோரா

சிவனுமரியின்பாவகமாகவே சிந்தைமகிழ்ந்துமன்னனிருந்தா ன்* மூவுலகும்புகழுமேவுங்கும்பமுனிவன் முன்வர மௌனமாய் நிறைந்தான்* ... ... ...

பாவையையனுகர்ந்திடுங்குருமுனிவன் வெகுண்டு பார்த்திபன் முக நோக்கிப்புகன்றான்* அரசனீமதியாமலிருந்திடும் மதத்தினா லானையாய்த்திரியென்று வகன்றான்* ... ...

விருத்தம்

குருமுனிசபிக்கக்கண்ட கோமகனுற்றானாகி
வருவது நன்றோதீதோ வந்ததுவரட்டுமென்று
திரிகரணங்களோயத் தேவர்க்குந்தேவனாகு
மரிதிருச்சரணந்தன்னை யகமகிழ்ந்துரை செய்வானே

கீர்த்தனை

இ—ம் பிலகரி அடதாளம்

பல்லவி

சரணகதியருள்வாய் முத்திகொடுக்குஞ் சரணகதியருள்வாய்

அநுபல்லவி

அரியயன்முதலோர்கணிதந்துதி ஆதியந்தமிலாதவதிபதி
மருவும்வாதனை கெடுக்குந்திருப்பதி மலையில்வளர்ந்திடுந்திருவெ ங்கடபதி (சரணகதி)

சரணங்கள்

தேவாசுரநாதா திவ்யாபத்மநாபா பிரக்யாதா— கோபிமார்விளை டுந்திருமணி குண்டினபுரம்வாழும்ருக்குமணி— மேவுமருணபயமா னதினமணி— விளங்குமறைதனிற்றுலங்குங்கண்ணின்மணி (சரண)

அறிவாகியமாதவா— தேவகிபெற்ற பரிபூரணயாதவா— தரிகண ங்கணஜெகிணங்கிட தகுர்தத்திகுதிகுதளங்குதோமென— துரிதவ ரவின்மேல்விளங்குந்திருநடன்— தொந் தொந் தொந்தோ மென் றெந்தையாடிய (சரண)

சீதாபதிசரண— திவ்யாமதுசூதா—குருசரண— ஓதுமுத்துலிங்க

Digital Collection of Tamil Heritage Foundation

த்காசன்பணிந்திடும்— உத்தமர்க்குபதேசம்புனைந்திடும்— வேதமுனிபராமாகத்துணிந்திடும்—விடணன்றினம் வணங்கிக்கனிந்திடும் (சா

தோரா

குருமுனிசாபத்தால்பெரியபாற்கடலினுட் டிரிகூடமலைச்சாரலினிலே* கரியுருவாகிமன்னனரிகளெல்லா நடுங்கத்திரியுமன்னாதனிலே*

கானகந்தன்னிலுள்ள ஆனைகளுக்காசாய்க் கண்ணனுங்கோபியரும்போலே* வானமுளங்குமேலானபிடிகளுடன் மகிழுங்கஜேந்திரனைப்போலே* ... ... ...

கடகரிசூழ்ந்துவரபிடிகளுங்கூடவரக் கயமுனிக்கூட்டம்பின்வரவே* அடவியெல்லாந்தடவிமடுவிற்சலம்பருகி யருங்கனிதின்றுகளிதரவே* ... ... ...

தக்கடா

சோலையின்மருங்கெல்லாமோடி — மலை
மேலேகுதித்துவிளையாடி — மேரு
போலேவாழ்ந்திடுநாளிற்றேடி — வேடைக்
காலம்வந்ததுவுமாவாடி — (ஸ்ரீரகுராமன்)

தோரா

கதிர்வெயிற்படவேபதம்பொடிசுடவே கஜேந்திரனுடல்வெதும்பிடவே* மதகரியினிடையேபிடிகளுமுடனே வருங்குருளையுங்கலங்கிடவே* ... ... ...

அந்தரதாகமதாய்கொந்துகரிகளெல்லாஞ் சிந்தைகலங்கிமுகம்வாடத்* தந்திகளுக்கரசாய்வந்தகஜேந்திரனுந் தண்ணியையெண்ணிச்சோபம்போட* ... ... ...

வடகிரிமுதலாக நெடுவரைகளனைத்தும் மண்ணில்நடந்தவந்நாற்போலே* அடவிகள்பொடிபடக்கழிகேவோடிவிறிட்டு வரித்திரிகூடமலைப்பாலே* ... ... ...

சென்றுசோலைநடுவேதுன்றுமோடைதனிலே சிறந்திடுங்கரியெல்லாமேவக்* குன்றுமலையும்போலக்கன்றுப்பிடிகளையுங் கூட்டிக்கஜேந்திரனுந்தாவ* ... ... ...

ஓடைதனிற் குதித்து வேடையெல்லாந் தணித்து வொருதும்பிக்கையாற் ஜலமெடுத்து* வாடியிளங்கன்றுக்குங் கூடும்பிடிகளுக்கும் மழையெனக்கரிராஜன் கொடுத்தது ... ...

### துக்கடா

ஓடையின் கரைகளையிடித்து — மணல்
மேடையின் வனங்களை வொடித்து — விளை
யாடும்படியிற் காராதுடித்து — ஆனைக்
காலினையிழுத்ததுபிடித்து — (கரியுருவாகும்)

### தோரா

முதலையிழுத்திடவுமதளகுதளமதாய் மூடிகியேகரிராஜன்றி* கதமுரும்விசையோடேவதிரும்படிவிறிட்டுக் கரையிலிழுத்ததுகாண்மாறி* ... ... ...

பாவந்திரண்டுவருமேவிவந்தது போதும் பாவிமுதலைவாயிற்கெளவி* கோபமதாகவேவாவிதனைவலிக்குங் கொடுமைபோலிழுத்தது வெளவி* ... ... ...

அண்டகடாகமெல்லாங்கண்டதுண்டம்படவே வார்த்துக்கஜேந்திரனும்வாடக்* கண்டகரிகளெல்லா மண்டியிழுத்துங்களை கொண்டுவாமற்பயந்தோட* ... ...

### விருத்தம்

ஆழிகடற்குழலிலானை யொன்றுங்காணமற்
சூழுங்கஜேந்திரனுந் துடிதுடித்தாராவாண்டு
ஏழலகுந்தானழுக யெங்கிமனம்புண்ணுகி
நாழிகைக்நாழிகையாய் நலமிழந்துவாடியதே

### தோரா

துஷ்டர்கள்கையிலகப்பட்டஜந்துவைப்போலே வெட்டிமுதலையிழுத்திடவே* அஷ்டகஜங்களுடன்மூட்டுங்கஜேந்திரனுந் தொட்டுயிழுத்துக்களைத்திடவே* ... ...

அரியமடுவுதனிற்கரியுங்காரவுமாக வாயிரவருடம்போர்செய்

Digital Collection of Tamil Heritage Foundation

யப்* பெரியகஜேந்திரனும்பொரிகள்கலங்கிவாடி பேதலித்தேமன
தாய்ப*  ...  ...  ...

துக்கடா

வேதனையாயுடலம்வாடக் — கண்
ணீரில்வெள்ளத்ததும்பியோட — நிற்கும்
பாதமுந்தளர்ந்துதள்ளாடப் — பாஞ்
சோதியையுன்னுமுத்தி கூட — (கரியுருவாகும்)

தோரா

முத்தியினுருவாய்ப்பத்தியின்றருவாய் மூவுலகத்தினுக்குங்கருவாய்* சித்தியின்விரிவாய்நித்தியமாகும் தேவனேகாத்தருள்புரிவாய்*  ...  ...  ...

கொச்சகம்

உள்ளமேகோவிலாக வோங்காரமூர்த்தியாகி
வெள்ளிறுமென்னைபோலே யெங்குமாய்நிறைந்துநிற்குங்
கள்ளனேகருணைநந்தக் கடவுளேஞானானந்த
வெள்ளமேயடியேன்துன்பம் விலகவேயருட்செய்வாயே

கீர்த்தனை இ-ம் சங்கராபரணம் திரிபுடைதாளம்

பல்லவி

முத்திகொடுக்கும்பொருளே— வுந்தன்— சித்தமிரங்கியருளே

அனுபல்லவி

பிரமந்தனவனான நித்தியமோன (முத்தி)

சரணங்கள்

கண்ணுஞ்சுழன்றுவிடுதே மனம்புண்ணாகிநொந்துபடுதே
உன்னையெண்ணியென்னுள்ளஞ்சுடுதே கிர்பைபண்ணிவேதனை
தீருப்— (முத்தி)

வைராக்கியமில்லையே வுனக்கேனோயிரக்கமில்லையே
உயிர்போனாற்றொல்லையில்லையே நீயுந்தானேவலிந்துவருவாய்

Digital Collection of Tamil Heritage Foundation

காலுங்காமும்பின்னாதே ஆதிமூலமென்றன்னையெண்ணாதே
வெகுகாலந்துயரம்பண்ணாதே மகிபாலா வெந்தனையாளுவாய் (மூ
பத்திவலையிற்படுவாய்நீயும் வைத்தமாயையைவிடுவாய்
சொல்லும்முத்துலிங்கனுக்கருள்வாய் வேதவித்தேகருணைபுரிவாய் (

## தேவாரம்

அந்தோவந்தோவெடுநாளா யலைசேர்மடுவிற்காராவுதனால்
தொந்தேசிந்தாகுலனாகி நோவேனாவிதமோற
வந்தாட்கொள்ளாவிடிலடியேன்முடிவேன்யானைபக்கரைக்காசே
எந்தாவென்னைப்படைத்தளிக்கு மீசாவுந்தனடைக்கலமே.

## கீர்த்தனை இ-ம் முகாரி அடதாளம்

### பல்லவி

கடைக்கண்பாராய் யெந்தனுக்கிந்த யிடுக்கத்தைத்தீராய்.

### அநுபல்லவி

அடைக்கலமுதலைவாயிற் கொடுத்திடாமலென்னைவந்து. (கடைக்)

### சரணங்கள்

தத்துவாதீதவேதாந்தநித்தியா சச்சிதாநந்த— வஸ்துவே— நித்தி
யானந்தகர்த்தவே— யெந்தனைக்காப்பாய்ஆதியே— ஞானப்ரகாச
ஜோதியே— யெந்தன்வேதனைதுன்பத்தைநீக்குப் நீதமே— அநு
பூதியே— கடைக்)

அண்டபகிரண்டமெல்லாந்தெண்டனிடுஞ்சாமீ— யெம கண்டக
ன்பிடித்து யென்னைக்கொண்டுபோகுமுன்னே— ஆளாய்— ஆண்ட
வா— வுலகமெங்குநீண்டவா— வுன்னை—வேண்டிடுமடியர்நெஞ்சி
ற்றூண்டவா— மனப்பூண்டவா— (கடைக்)

ஆலையிற்கரும்புபோலும்— வேலையிற்றுரும்புபோலும்— சூலைவந்
தபாலன்போலுஞ்— சாலநொந்தேனன்புந்தீர்ப்பாய்— அய்யனே—
சுருதிசொல்லுமெய்யனே— யெந்தன்தெய்வமே— யானென்ன
செய்வேன்துய்யனே— திருக்கையனே. (கடைக்கண்)

ஆனையாய்மடுவில்வந்து— பூனைபோலொடுங்கிநொந்து— ஊனுரு
க்கம்போய்மெலிந்து— தீனனானயென்னையாள்வாய்— அத்தனே— க
ருணைசெய்யும்சித்தனே— அருள்— முத்துலிங்கதாசன்சொல்லுமு
த்தனே— பரிசுத்தனே [கடைக்கண்]

Digital Collection of Tamil Heritage Foundation

## விருத்தம்

நித்தியனைந் நிர்மலனை நிஷ்களனைந் நிராமயனைச்
சத்தியனை வேதாந்தத்தத்துவனை நின்றிலங்குஞ்
சுந்தப்பரம்பொருளை சோதிச்சுடரொளியே
அந்தனையென்றன் வந்தாள்வாய்க்கிருபாகரனே

## கண்ணிகள் இ—ம் காம்போதி அடதாளம்

தாதா திருப்பாதா மனுநீதா ப்ரக்யாதா
வாதா சாயநேதா ஜகன்மாதாவுனக்கபயம் (தாதா)
கருவேஜெகத்குருவே வேதத்தருவேயென்தன்குருவே
அருவேயலர்பருவே பெருந்திருவேயுனக்கபயம் (தாதா)
ஈசாபராமேசா விசுவாசாபாவநாசா
வேசாசருவேசா பக்தர்நேசாவுனக்கபயம் (தாதா)
கருணா ஞானஸ்பரணா பவஹரணாபக்தர்தருணா
வருணா முக்திச்சரணா வந்தக்காரணாவுனக்கபயம் (தாதா)
யோகா ஜெகன்மோகா வனுபோகாபாலோகா
யாகாசங்கத்யாகா குணபாகாவோடிவாரும் (தாதா)
ஸோமாசர்வகாமா பிரம்மநாமா ஞானசேமா
ஏமா பேமாசந்நீமா வேதசாமாஓடிவாரும் (தாதா)
நேயா ஜெகன்மாயா! திருவாயா மோனஞாயா
சேயாவோமத்தியா சொல்லுபாயா வோடிவாரும் (தாதா)
தீராவதிசூரா வேதசாரா பாவகோரா
வீராமணியாரா பக்தர்சேரா வோடிவாரும் (தாதா)
சீலாவநுகூலா லோகபாலாதுஷ்டர்காலா
லீலாமோகசாலா ஆதிமூலா வோடிவாரும் (தாதா)
முத்துலிங்கதாசன் சொல்லும்முதலேபாஞ்சடனே
சித்தபிரசன்னிவாய் ஞானத்தேவேவோடிவாரும் (தாதா)

## தோரா

நெஞ்சமுமாவியுமிஞ்சிப்பாக்குதிப்போ யென்செய்வேன்வ
ஞ்சகமேகோ அஞ்சிடுயென்தன்முன்னேகிஞ்சித்தேனுமிரங்கி
அபயன்தாதாவுயாகாதேசீ

Digital Collection of Tamil Heritage Foundation

### கொச்சகம்

மாயாப்ரபஞ்சமெனும் வாருதியிலேமூழ்கி
ஓயாக்கவலையினு லுள்ளுடைந்து மெய்வாடி
பேயாய்ப்பிதற்றிமனம் பித்தாகிநொந்தவென்னைத்
தாயேயனையதயா நிதியேகாத்தருளே

### கண்ணிகள் இ-ம் காம்போதி அடதாளம்

சத்தியஞானசதானந்தபோதமே ஞானநாயகா— வுந்தன்
வித்தைசெய்யும்மாயா வித்தையிற்சிக்கினேன் ஞாயமா ஞாயமா
முதலைகடித்திழுக்கவதிகதுக்கத்திலானேன் லோகநாயகாவுன்னை
சதமென்றுநம்பினேற் கதிதாராதிருப்பதும் ஞாயமா ஞாயமா
பெற்றதாய்பிள்ளையைச் சற்றுமறப்பதுண்டோ நீதியாளனே நா
னித்தனைப்பாடுபடப்பார்த்திருப்பதும் ஞாயமா ஞாயமா
கருணைக்கடல்நீயென் றுயருமறையுரைக்குதே தேவதேவனேயிந்த
தருணத்திலாளாமலிருமாந்திருப்பதும் ஞாயமா ஞாயமா
நச்சுமாயானுலும்வச்சமாயல்லவோ ஆதிதேவனே வுந்தன்
இச்சையினுலென்னை ரக்ஷிக்காதிருப்பதுஞ் ஞாயமா ஞாயமா
அஞ்சுபுலனுமென்னெஞ்சுந்தியங்குதே பூதநாயகா இப்போ
அஞ்சலென்றுளாமல் வஞ்சகஞ்செய்வதுஞ் ஞாயமா ஞாயமா
பூரணனீயென்றுவாரணஞ்சொல்லுதே சாமிநாதனே வுயிர்
சோரவுங்கண்டுமுகம்பாராதிருப்பதுஞ் ஞாயமா ஞாயமா
முத்துலிங்கன்பணியும்முத்திகொடுக்கும்ஞானயோகநாதனேவு
சித்தமிரங்கிடாதுன்மத்தனாயிருப்பதுஞ் ஞாயமாஞாயமா (சத்தி

### விருத்தம்

எல்லாவுலகுந்தானாகி யெல்லாவுலகும்படைத்தளித்து
எல்லாவுலகுமுள்ளாக்கி யெல்லாவுலகுக்கொருமுதலாய்
எல்லாவுலகுந்தொழுதேத்த வெல்லாமூர்த்திகளுமாகி
எல்லாப்பொழுதும்வீடளிக்கு மிறைவாஅபயமுனக்கப்பா

### கீர்த்தனை இ-ம் சங்கராபரணம் தாளம் ஆந்தரூபகம்

பல்லவி

ஆதிமூலமேயானுனக்கபயம் இந்தவேளைவந்தருள் (ஆதிமூல)

Digital Collection of Tamil Heritage Foundation

### அநுபல்லவி

ஆதியந்தமுமாதவிர்த்தவு மருவுமுருவு மருளும் பொருளும்
நிதிபுணரும்வேதமுடிவும் ஒன்றாய்ப்பலவுயிராய்நின்றோங்கிய (ஆதிமூ)

### சரணங்கள்

அஞ்சபொறியு- மஞ்சபுலனுமா- யஞ்சகாரணமாகியும்- அஞ்ச கோசமு- மஞ்சவஸ்தையுமாய்- அஞ்சபூதமு- மஞ்சவேதமு- மஞ்சகன்மமு- மஞ்சதன்மமும்- அஞ்சமூர்த்தியு- மஞ்சமவுன மு- மாகியபூரணஞானவடிவாகும்- (ஆதிமூல)

சரிகைகிரிகையோகஞானமும்- சதுர்வேதமுறைக்கும்- பெ ரியகன்மமாதிகாண்டமும்- அரியவிதியும்விலக்குமாமமு- மறைத் து வரைந்து கறைந்து வருகி- உரியமௌனமாகிவிளங்க- வுயர்ந் து வுயர்ந்து நிறைந்துதுலங்கும்- (ஆதிமூல)

அகத்தும்புறத்திராறுசமயமு- மின்னர்தேடித்தேடி- யகத்தும்ப றத்தும்மலைந்துதியங்கவும்- மகத்துமணுவுமணுவுமகத்தும்- மாகி யமுக்குணநிர்க்குணமாகவும்-முகஸ்தமாய்முத்துலிங்கதாசன்சொ ல்லும்- முத்தியும்சித்தியும் புத்தியுமாகிய (ஆதிமூல)

### துக்கடா

என்றுபொற்றாமரைகைப்பிடித்து திரு
ஒன்றும்மஸ்தகத்துமேலெடுத்து துன்பங்
கொண்டுகண்ணீர்வெள்ளம்வடித்து வாய்
விண்டுஆதிமூலமென்றுரைத்து (கரியுருவாகும்)

### தோசா

கரிராஜன்கூப்பிட்டு முறையிடுஞ்சத்தமதை அயன்முதலமர ருங்கேட்டார்* உரியவிக்குணம்மைக்கரியதரியதென்றும்பவின் முன்னேவரமாட்டார்*

அப்பொழுதண்டத்தப்புரமிலங்கு மரிநாராயணனுணர்ந்தார்* செப்புமவைகுண்டத் தொப்பயரில்லா சிம்மாசனத்தினின்றெழுந் தார்*

Digital Collection of Tamil Heritage Foundation

கண்டதிருமகளுமண்டருந் தொண்டருந் தெண்டனிடுவதை யும்பாரான்* தெண்டிறன்மிகுந் திடர்தெண்டர்கள்புகழ்ந்திடுஞ் சேனாதருடனுமேறான்* ... ...

தாயுந்தந்தையுமாகவாயர்குலத்தில்வருஞ் சக்கரதரனருண்மீறி* வாயுமனவேகமுமேயும்படி வேகத்தில் பாயுங்கருடன்மீதிலேறி* ... ... ...

விருத்தம்

மடுவென்றுரைக்குமடுமதனிலங்கி மாதவவிரதரோங்கியற்றி
பலபலதெய்வங்களைமுறைவேண்டி பரமன்றனருளின்றிப்பயந்த
குலவிளக்கனையமதனை கூகாவென்றழுதிடக்கேட்ட தாய்க்குணம்
அலகிலாவிளையாட்டாடுமோதி மூலனுமானைமுன்வந்தான் (போல்

கீர்த்தனை இ—ம் சங்கராபரணம் தாளம் ஆனந்தரூபகம்

பல்லவி

ஆதிமூலனுமானைமுன்வந்தான் அருளாகரத்துமடுவில் (ஆதி)

அநுபல்லவி

சோதிப்பிரகாசவேதரூபன்மேற் றுலங்குங்கரியசூரியன்போலவே
ஆதியுமாயமதுசூதனுமாகிய அச்சுதன்நிச்சயன்சச்சிதானந்தனும்

சரணங்கள்

அடியரிடத்திற்குடியிருப்பவனும்— விஸ்வரூபமெடுத்துபடியும் விசும்புமளந்தளிப்பவனும்— கொடியபிணிக்குமருந்துபோலவும்— குருடனுக்கிருகண்வந்தாற்போலவும்— வடவன்குடிக்கோர்புதையற் போலவும்— வைகுந்தமபூமியில்வந்தது போலவும்— (ஆதி)

சங்குசக்கரமெங்குந்துலங்கவே— பீதாம்பரமொடுகங்குலிற்கதிர் போலவிளங்கவே— திங்கள்வதனமுஞ்செங்கைமலர்களும்— திகழு முடியும்புகழடியும்— மங்களம்பாடுமிந்தங்கமுனிவரும்— வாசவ னுங்கமலாசனனும்போற்ற— (ஆதி)

உள்ளமுருகவெள்ளம்பெருக்கிடும்— மகாமுனிவருங்கண்டுகொள் ளவரியகள்ளனாதலும்— பள்ளத்தைத்தேடிடும்வெள்ளத்தைப்போல

Digital Collection of Tamil Heritage Foundation

கவும் பசுவைத்தேடும்பாற்கன்றது போலவும்—பிள்ளையைத்தேடு க்தன்னையைப்போலவும்— பேரின்பந்தேடும்பேரறிவு போலவும் (ஆ

முக்தலிங்கனுக்கருளும் போகனும்— வைகுண்டம்வாழுஞ்சத்தி யன்பரிசுத்தனும்— அஸ்திறுபுரயவாழுமைவர்க்கரிய நாதனு மார்த்தபாரதம்— முற்றும்நடத்திட வெற்றிசங்கந்தனை— மொய்ம் பர்வாயினிற்பையவைத்தூதிடும்— (ஆதிமு)

தோரா

தந்திபழைக்குஞ்சத்தம்பிந்தஓடையின் முந்திசசார்ந்தனன் போர்புரிகரையில்* வெந்திடும்பயிருக்குவந்தமழைபோலவேவே ழத்தையீழுந்தனன்விரைவில்* ... ...

தக்கடா

அஞ்சேலஞ்சேலென்றநட்சாந்தான் ப்ரபை
விஞ்சஞ்சக்கரத்தினை யெறிந்தான் தெளவும்
வஞ்சகமுதனைவாயிசிந்தான் தெஞ்சிற்
நஞ்சமென்றவர்வினைகளைந்தான் (ஸ்ரீகுமரன்)

தோரக

கரிராஜன்மஸ்தகத்திலரிநாராயணன்திரு கைவைத்திடவுமல ர்பொழிந்தார்* தரிகிணதோமெனத்திருநடனமாடிடும் சம்புவுமமா ரும்புகழ்ந்தார்* ... ... ...

தம்புருவீணைகளாற் றும்புருநாரதரும் சரிகமபதனிசாவென் றார்* கொம்பில்லாக்குழலும்பம்பைமல்லாரிகளுங் கொட்டித் தேவர்குனித்துநின்றார்* ... ... ...

சித்தவித்தியாதரர்நித்யமங்களமென்று ஸ்ரீதான்றிருவடிசூட மத்தளமுழங்கிடவிர்த்தமுறைப்படிக்கு வானமங்கையர்சதிராட*

கருடகின்னரர்களுமருநசாரணர்களும் ஹரிஹரியென்றுநட னம்புரிந்தார்* சர்வகாரணன்ஞானசொரூபனிவனெமென்று மரு ளகந்தநவர்கொடீத்தார்* ... ...

Digital Collection of Tamil Heritage Foundation

துக்டா

இந்திரஜாலவட்டம்போட — அஷ்டப்
சுந்தரிமார்கண்முறை கூட — ப்ரம்ம
வந்துசாமகானங்கட்பாட — ராம
மந்தாமூர்த்தியைக்கொண்டாட — (ஸ்ரீ ரகுராமன்)

தோரா

ஜெயஜெயவெனவே அயன்முதலமரருந் திருவடிபுகழ்ந்திடும் போது* வயமிகுந்திகிரியாலயருங்காவுருப்போய் மகிழ்ந்தனன் உலகுவிண்மீது* ... ... ...

விருத்தம்

திருவளருந்திருமுகமுமருட்கண்ணேக்குஞ் செம்பவளத்திரு வாயுந்திருவாள்மார்பும்— மருமலர்ப்பூந்திருத்தோளுமுலகமெல்லா மளைத்திருக்குந் திருவயருமமறையோன்றங்கும்— பெருமைமிகு திருவுந்திச்சுழியும் முக்திபெரவளிக்குந்திருத்தாளுங்— கருத்தமெ ய்யுமருட்ருபஞ்சாயுதமுமடியேன்கா ணவமர்ந்தருளுந்திருக்கோ லம்போற்றிபோற்றி—

கீர்த்தனை

கண்ணிகள் இ—ம் காம்போதி ஏகதாளம்

மாதவா வுன்பாதங்கண்டபோதேயென்ஜென்மம் முத்தி
சாதனமானது ஜீவ சாக்ஷி சாக்ஷி சாக்ஷி சாக்ஷி (மாதவா)

அச்சுதாநந்தகோவிந்தா சச்சிதாநந்தப்ரம்மமீ
வைத்திடுமிந்தப்ரபஞ்ச மாயை மாயை மாயை மாயை (மாதவா)

சாமவேதக்யானம்பாடும் ராமா ராமா ராமா வுந்தன்
தாமரைதிருப்பாதத்தை தாதா தாதா தாதா தாதா (மாதவா)

முத்துலிங்கதாசன்சொல்லு மத்துவிதமானவுந்தன்
பத்திபெறவேதிருக்கண் பாராய் பாராய் பாராய் பாராய்(மாதவா)

தோரா

தேவலமுனிவன்றன்சாபமுமகலவே ஸ்ரீஹரிபாதத்தைப்புக ழ்ந்து* மூவர்க்குமுதல்வனும்போவெனப்போனுன் மூர்த்தகந்த ருவனும்மகிழ்ந்து* ... ... ...

Digital Collection of Tamil Heritage Foundation

அரிதிருக்காந்தொட்டவாசன் கரிராஜ் ஞயமார்த்திடுஞ் ஜெக மங்களகன்று* பரிபூரணனரிபோலுருவுஞ்சதுர்புயமும் பஞ்சா யுதமுங் கையிற்கொண்டு* ... ...

பூலோகமுதலாகமாலோகங்களனைத்தும் போற்றிடும்படிமுத் தனுனன்* சாலோகசாமீபம்மேலாந்திருவடிக்கீழ்ச்சார்ந்து பரமப தத்தனுனன்*

திக்டா

கரிஹரியுருவாகக்கண்டார் — முத்தி
நருந்தெய்வமூராஹரியென்றார் — அப்போ
அயன்முதலோர்கடுதிவிண்டார் — பான்
தரிசனங்கண்டுவிடைகொண்டார் — (ஸ்ரீரங்கராயன்திருவடி).

தேவருமேகவேழுவுலகளந்தாடுஞ் ஸ்ரீதான்கருடன்மேற்செந்தான்* தானிற்கஜேந்திரனுக்கும் பிரத்தியுமனன்றன்னுடன்வைகுண்டத்திலிருந்தான்* ... ... ...

மங்களம்

இ-ம் புன்னகவராளி அட்டதாளம்

ஜெய மங்களம். நித்யசுப மங்களம்

சிதாபிராமனே ஜெயபத்மநாபனே தெய்வீகரூபனே நிருபனே ஆதாரநேயனே அருள்ஞானதீபனே அதியோகநித்தியானந்தனே மணிமகுடவாரணமகிபாலதீரனே மதுசூதனே துளபமலர்மார்பனே, பணிசயனசூரனே பரமசெப்பிரனே பரமகுணனே தெய்வபர தெய்வமே, (ஜெய)

ஆயர்குலநேயனே ஐவர்கள்சகாயனே அனந்தனே பத்தர்க்கருண் பாலனே- தியர்குலகாலனே திருமங்கைலோலனே செங்கண்மா லேயெந்துயரபொருளே- (ஜெய)

கரிவரதராஜனே கருணைகடாக்ஷனே கரியமாணிக்கமேகவண்ணனே- மூராஹரிவ்யாசனே முத்துலிங்கதாசனே முனைகூரவருணத வைகோனபானே (ஜெய)

ஜெயா ஜெய மங்களம் நித்யசுபமங்களம்.

BRITISH MUSEUM
INDIA
COPYRIGHT
23 JU 99